1979 மார்ச் 10]

[பிற்பகல் 1—20]

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நாம் ஒழுக்க நெறிகளைப் பற்றிப் பேசுகிறோம். "வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்" என்று வள்ளுவர் சொல்லியிருக்கின்றார். அப்படி வஞ்ச மனத்தினர்கள் பேசிக் கொண்டிருந்தால் பஞ்ச பூதங்களும் சிரிக்குமே. அப்படிச் சிரிக்கக் கூடிய அளவிறகுத்தான் இந்தச் சட்டம் இருக்கிறதே தவிர சிந்திக்கின்ற அளவிற்கு இல்லை. 'பப்ளிக் ஒபினியன் எலிசிட்' செய்ய இதை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(3). அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஆ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 10-நாள்) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுகளின்படி பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டபடி நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

11—3—1979 (ஞாயிறு).	விடுமுறை.
12—3—1979 (திங்கள்). 13—3—1979 (செவ்வாய்). 14—3—1979 (புதன்). 15—3—1979 (வியாழன்). 16—3—1979 (வெள்ளி) 17—3—1979 (சனி).	அரசினர் சட்ட முன்வடிவுகள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

18—3—1979 (ஞாயிறு).	விடுமுறை.
19—3—1979 (திங்கள்). 20—3—1979 (செவ்வாய்).	1979–80-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்.
21—3—1979 (புதன்).	1979–80-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம். பதிலுரை.
22—3—1979 (வியாழன்).	மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 20—வேளாண்மை. 36—பாசனம். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு.
23—3—1979 (வெள்ளி).	28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன. 34—நகர்ப் பகுதி மேம்பாடு.
24—3—1979 (சனி)	6—பத்திரப் பதிவு. 23—கூட்டுறவு. 57—பல்வகை மூலதனச் செலவு.
25—3—1979 (ஞாயிறு).	விடுமுறை.
26—3—1979 (திங்கள்). 27—3—1979 (செவ்வாய்).	17—கல்வி.
28—3—1979 (புதன்).	தெலுங்கு வருடப் பிறப்பு—விடுமுறை.

1979 மார்ச் 10] [பேரவைத் தலைவர்]

மேலே குறிப்பிட்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்கள் 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 16-ம் நாள் அன்று பகல் 11 மணிக்குள் கொடுக்கப்பட வேண்டும்.

அலுவல் ஆய்வுக் குழு மீண்டும் 1979-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 15-ம் நாளன்று கூடி மற்ற மானியக் கோரிக்கைகள் பற்றித் தீர்மானிக்கும்.

6. அரசினர் சட்டமுன் வடிவு—(தொடர்ச்சி).

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979—தொடர்ச்சி.

திரு. ரா. மார்க்கபந்து: நான் இந்த பில்லிலே பேசுவதற்கு அதிக நேரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இப்பொழுது பேசுங்கள். ஒன்றரை மணிக்குள் உங்கள் பேச்சு முடியாவிட்டால் தொடர்ந்து விவாதம் நடக்கும்பொழுது அனுமதி கொடுக்கப்படும்.

*திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு மிக முக்கியமான பிரச்சினையிலே ஈடுபட்டு, இந்தச் சட்டமன்றத்திலே பலவிதமான கருத்துக்கள் வைக்கப் பட்டிருக்கின்றன. தமிழகத்திலே இருக்கின்ற ஜனத்தொகையிலே ஏறக்குறைய பத்து சதவீத மக்கள் குடிக்கின்றார்கள், காய்ச்சுகிறார்கள், அதன் மூலமாக நாட்டிலே ஒழுக்கக் கேடுகள் ஏற்படுகின்றன என்பதை நாமெல்லாம் அறிந்திருக்கிறோம். அந்த ஒழுக்கக்கேடுகள் நடப்பதைத் தடைப்படுத்தும் முகத்தான் இன்று இந்தச் சட்டம் அமலாக்கப்படவிருக்கிறது. இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். அதே நேரத்திலே, சில தண்டனைகளானது மிகவும் அதிகமாக இருக்கின்றன. இந்தத் தண்டனைக்கு ஆளாக்கப்படுகின்ற மக்கள் சாதாரண மக்கள், வலிவற்ற மக்கள், தங்களுக்குப் பாதுகாப்பு இல்லாத மக்கள்தான் இப்படிப்பட்ட தண்டனைகளுக்கு ஆளாக்கப்பட்டு, இன்றைக்கு நீதிமன்றங்களிலே அதிகப்படியான வழக்குகளிலே ஈடுபட்டு வழக்கு மன்றங்களிலே எப்பொழுதும் சென்று நிற்கின்ற நிலைமைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகையால் ஒரு சில பிரிவுகள் குறிப்பாக 4(1) (*a*) possession, 4(1) (*j*) consumption, 4A Intoxication இவைகளுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற மூன்றாண்டுக் கால தண்டனையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.